**முதன்மைக் கல்வி அலுவலர்களின் நேர்முக உதவியாளர் (மேல்நிலை) மற்றும் நேர்முக உதவியாளர் (இடைநிலை) இணையவழிக் கூட்ட குறிப்புகள்**

முதன்மைக் கல்வி அலுவலர்களின் நேர்முக உதவியாளர் (மேல்நிலை) மற்றும் நேர்முக உதவியாளர் (இடைநிலை) இணையவழிக் கூட்டம் பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களால் **23.08.2024 மாலை** 5.00 மணிக்கு நடத்தப்பெற்றது. கூட்டத்தின் போது கீழ்க்காண் விவரங்கள் குறித்து ஆலோசணையும், அறிவுரைகளும் இணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டது.

1. மாறுதல்/பதவி உயர்வு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களாக பணியில் சேர்ந்த முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு நேர்முக உதவியாளர்கள் சார்ந்த மாவட்டத்திலுள்ள அரசு/நிதி உதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அளைத்து குறை/நிறைகளை தலைமை ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து தேவையான விவரங்களை முதன்மைக்கலவி அலுவலரிடம் தெரிவிக்கவேண்டும்,
2. முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கைக்கணினி (Tablet) யை மாவட்டம் சார்ந்த அனைத்து விவரங்களையும் ( Dist Profile) பதிவேற்றம் செய்ய வேண்டும் ,அடுத்து நடைபெறவுள்ள இணைய வழி கூட்டத்தில் கைக்கணினியை பயன்படுத்தி தவறாது கலந்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது,
3. **EMIS இணையதளத்தில் பதிவேற்றும் பணிகளை ஆசிரியர்கள் செய்யும் போது கற்றல் கற்பித்தல் பணிகளுக்கு பெரும் இடையூறு ஏற்படுவதாக தெரியவருகிறது ஆகையால் ஆசிரியல்லாத பணியாளர்களுக்கு (Non Teaching Staff / AI ) பயிற்சியளித்து EMIS பணியினை ஆசிரியல்லாத பணியாளர்களைக் கொண்டு மட்டுமே முடிக்கப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.,**

4. Hi Tech ஆய்வகத்திற்கு மடிக்கணினிகள் பள்ளிகளுக்கு (படிவம் 1 மற்றும் 2) வழங்கிய விவரம் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. . (விவரங்கள் அனுப்ப வேண்டிய மாவட்டங்கள் – கிருஷ்ணகிரி, தூத்துக்குடி திருவண்ணாமலை மற்றும் வேலூர்)
5. 2023 – 24ம் கல்வியாண்டிற்கு நோட்டுப் புத்தகங்கள் பெற்று வழங்கியமைக்கான அறிக்கையினை சமர்ப்பிக்காத மாவட்டங்கள் உடனடியாக அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது
(விவரங்கள் அனுப்ப வேண்டிய மாவட்டங்கள் – தர்மபுரி, கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டணம், நாமக்கல், தென்காசி, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருப்பூர், திருவள்ளூர், வேலூர் மற்றும் விழுப்புரம்)
6. 2023 – 24ம் கல்வியாண்டிற்கான கல்வி உபகரண பொருட்கள் பெற்று வழங்கியமைக்கான அறிக்கையினை சமர்ப்பிக்காத மாவட்டங்கள் உடனடியாக அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.
(விவரங்கள் அனுப்ப வேண்டிய மாவட்டங்கள் – சென்னை, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், திருப்பூர், திருச்சி, தென்காசி, மற்றும் விழுப்புரம்)
7. 2024 – 25ம் கல்வியாண்டிற்கு போக்குவரத்து செலவின தொகை RTGs மூலம் மாவட்டக் கல்வி அலுவலரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டமைக்கு மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து ஒப்புதல் பெற்று சமர்ப்பிக்காத மாவட்டங்கள் உடனடியாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.
(விவரங்கள் அனுப்ப வேண்டிய மாவட்டங்கள் – அரியலூர், சென்னை, கடலூர், செங்கல்பட்டு, திண்டுக்கல், ஈரோடு, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சிவகங்கை, திருவள்ளூர், திருவாரூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, வேலூர் மற்றும் மயிலாடுதுறை)

8. 2024 – 25ம் கல்வியாண்டிற்கு பாடநூல்கள் தனியார் பள்ளிகளில் சுயநிதிப் பிரிவில் தமிழ் வழியில் பயிலும் மாணாக்கர்களுக்கு பாடநூல்கள் வழங்கப்பட்டதற்கான நாளது தேதி வரை வழங்கப்படாத மாவட்டங்கள் உடனடியாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

(விவரங்கள் அனுப்ப வேண்டிய மாவட்டங்கள் – சென்னை, கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தேனி, திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர், விழுப்புரம், விருதுநகர் மற்றும் மயிலாடுதுறை)

9. 2024 – 25ம் கல்வியாண்டிற்கு இரண்டாம் பருவ பாடநூல்கள் தேவைப் பட்டியல் Google Sheet மூலம் பெறப்பட்டு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத்திற்கு வழங்கப்பட்டது அதற்கான மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கையெழுத்திட்ட நகல் அனுப்பிட அனைத்து மாவட்டங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களும் தனிக்கவனம் செலுத்தி உடனடியாக கையொப்பமிட்ட நகல் அனுப்பிட அறிவுறுத்தப்பட்டது

10. 2024 – 25ம் கல்வியாண்டிற்கு 3rd & 4th Set Uniform மற்றும் மதிய உணவு தேவைப்பட்டியலுக்கான முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பமிட்ட நகல் விரைவில் தனிக்கவனம் செலுத்தி அனுப்பிட அனைத்து மாவட்ட நேர்முக உதவியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

11. 2023 – 24 மற்றும் 2024 – 25 கல்வியாண்டிற்கு நலத்திட்டங்கள் பெற்று வழங்கிய விவரம் அவ்வவ்போது EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் பலமுறை அறிவுறுத்தப்பட்டும் நாளது வரை முழுமையாக (100%) பதிவேற்றம் செய்யப்படவில்லை. இதனால் அரசு செயலர் மற்றும் இயக்குநரின் கூட்டத்திற்கு முழுமையான சரியான அறிக்கையினை சமர்பிக்க இயலா நிலை ஏற்படுகிறது. எனவே நேர்முக

உதவியாளர்கள் இப்பொருள் சார்ந்து சிறப்பு கவனம் செலுத்தி நலத்திட்டங்கள் வழங்கிய உடன் EMIS இணையதளத்தில் முழுமையாக பதிவேற்றம் செய்யப்பட்டதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டது